## ஒழுக்கம்

எது உயர்ந்த ஒழுக்க நெறி என்று கேட்டால், திரிகடுகம் ஆசிரியர்

முந்தை எழுத்தின் வரவுணர்ந்து பிற்பாடு
தந்தையும் தாயும் வழிபாட்டு – வந்த
ஒழுக்கம் பெருநெறி சேர்த்தல் இம்மூன்றும்
விழப்ப நெறிதூரா வாறு. (திரிகடுகம் 56)

இளமையில் கல்வி அறிவைப் பெறுதல், தந்தையையும், தாயையும் வழிபட்டு வந்த ஒழுக்கம், பெரியோரின் நெறியில் சேர்தல, ஆகிய இந்த மூன்றும் உயர்ந்த நெறிகளாகும். கல்விதான் நமக்கு நல்லொழுக்கம், நற்குணங்கள், நற்சிந்தனைகள் ஆகியவற்றை கற்றுத் தருவது. இளவயதில் நமக்கு அறிவை ஊட்டுவது நமது தாயும் தந்தையும் தான் என்பதில் என்ன ஐயம்?

ஒழுக்கத்தை உறுதியாகக் கடைப் பிடிக்காதவர் எவர்? என்ற கேள்விக்கு திரிகடுகம் ஆசிரியர்

நண்பில்லார் மாட்டு நசைக்கிழமை செய்வானும்
பெண்பாலைக் காப்பிகழும் பேதையும் – பண்பில்
இழுக்கான சொல்லாடு வானும் இம்மூவர்
ஒழுக்கம் கடிப்பிடியா தார். (திரிகடுகம் 94)

என்று பதில் இருக்கிறார். நட்புத்தன்மை இல்லாதவாரிடத்து அன்புரிமையை காட்டுபவனும், மனைவியைக் காப்பதை இகழ்கின்ற அறிவற்றவனும், குணம் இல்லாத தவறுதலான சொல்லைச் சொல்பவனும், என்ற இம்மூவரும் தமக்குரிய ஒழுக்கத்தை உறுதியாகக் கடைப் பிடிக்காதவர் ஆவர்.